# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**<u>ஆணை நாள் 02.04.2025</u>**

<u>முன்னிலை</u>

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA-943/A/2024</u>**

திரு.இ.இம்ரான் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
29/13, பேன்பேட்டை முதல் தெரு,
சைதாப்பேட்டை மண்டலம்,
சென்னை-35. -- பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு. இ.இம்ரான், நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | ல.அமராவதி,<br>பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,<br>உணவுப்பொருள் வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்புத் துறை,<br>நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 27.12.2023 |
| மனுதாரர், புதிய குடும்ப அட்டை குறித்த சில தகவல்களை 5 இனங்களில் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | --- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 06.01.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | --- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 29.01.2024 |
| விசாரணை அழைப்பாணை நாள் | 02.04.2025 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்களுக்கு உரிய முழுமையான தகவல்களை பெற்றுத்தருமாறு தன் தரப்பு

வாதத்தை முன்வைத்தார். மேலும், தனது புதிய முகவரியை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் திருமதி.ல.அமராவதி, பொது தகவல் அலுவலர் / மேலாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சைதாப்பேட்டை, சென்னை-35 அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் ந.க.எண்.அ1/1719/2023, நாள் 04.01.2024 நாளிட்ட கடிதத்தில் முழுமையாக வழங்கப்பட்டதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரர் அவர் அளித்த முகவரியில் இல்லாததால், அக்கடிதமானது மீள பொதுத்தகவல் அலுவலரின் அலுவலகத்திலேயே பெறப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் ஆவடி மண்டலத்தில் புதிய குடும்ப அட்டை பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் தகவல் கோரும் பிரிவு 6(1)-ன் கீழான மனு, பொதுத் தகவல் அலுவலரின் வாதுரை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், **மனுதாரர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்கள் பொதுத் தகவல் அலுவலர் வழங்கியுள்ளதாக ஆணையம் ஏற்கிறது. மேலும், மனுதாரரின் பிரதான கோரிக்கையான புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மனுதாரர் தனது மனுவின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என விசாரணையின் போது தெரிவித்ததால் இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்ய உத்தரவிடப்படுகிறது**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-943/A/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
29/13, பேன்பேட்டை முதல் தெரு,
கால்நடை மருத்துவமனை சாலை,
சைதாப்பேட்டை, சென்னை-35.

**<u>மனுதாரர்</u>**
திரு. இ.இம்ரான்,
த/பெ.இக்பால்,
எண்.17, வ.உ.சி. தெரு,
பட்டாபிராம், திருவள்ளூர்,
சென்னை 600 072.

KRM/PA 09.04.2025